පළාත් රාජ්‍ය සේවා කොමිෂන් සභාව, නැගෙනහිර පළාත, ත්‍රිකුණාමලය
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம், திருகோணமலை
PROVINCIAL PUBLIC SERVICE COMMISSION, EASTERN PROVINCE, TRINCOMALEE

ඔබේ අංකය / உமது இல / Your No

මගේ අංකය / எனது இல / My No: EP/07/03/01/04/2024

07.05.2024

பிரதம செயலாளர்,
செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள்,
மாகாண பணிப்பாளர்கள், ஆணையாளர்கள், மாநகர ஆணையாளர்கள்,
வலயக் கல்விப் பணிப்பாளர்கள், நகரசபை செயலாளர்கள்,
பிரதேசசபை செயலாளர்கள்,
கிழக்கு மாகாணம்.

**கிழக்கு மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் நன்னடத்தை உத்தியோகத்தர், தரம் - II இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை – 2024**

கிழக்கு மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் நன்னடத்தை உத்தியோகத்தர், தரம்-II இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சைக்காக தகைமைகளை பூர்த்தி செய்த கிழக்கு மாகாண பொதுச் சேவையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி **22.05.2024** ஆகும்.

எனவே, தங்களது அமைச்சில் / திணைக்களத்தில் / அலுவலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு இது தொடர்பாக அறிவிக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

கிழக்கு மாகாண பொதுச்சேவையில் கடமையாற்றும் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தரால் மாதிரி விண்ணப்பத்திற்கு அமைவாகவும் சரியாகவும் பூர்த்தி செய்து சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களில் அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற அதே தினத்தில் உரிய அலுவலக முத்திரையை இடுமாறும் அத்துடன் உரிய ஆவணங்களையும் விண்ணப்பப்படிவத்தில் பந்தி இல.10.0 இல் திணைக்களத்தலைவரினால் சான்றுறுதிப்படுத்தி சான்றுறுதிப்படுத்திய திகதியைக் குறிப்பிட்டு தங்களது சிபார்சுடன் **22.05.2024**ந் திகதியோ அல்லது அதற்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைப்பதற்கு திணைக்களத்தலைவர் / அமைச்சின் செயலாளரால் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் தங்களை கேட்டுக்கொள்கிறேன்.

எனவே சகல விண்ணப்பதாரிகளும் விண்ணப்பப்படிவத்தினை அனுப்புவதற்கு முன்னர்,

**www.ep.gov.lk** → Exams & Results → Recruitment Exams என்ற கிழக்கு மாகாண இணையத்தளத்தில் மேலே குறிப்பிட்ட பதவி தொடர்பாக மேலதிக தகவல்களையும், தகைமைகளையும் பார்வையிட்டு மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக விண்ணப்பப்படிவங்களை அனுப்பிவைப்பதற்கு அறிவிக்குமாறும் தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**ஆ. மன்சூர்,**
செயலாளர்,
மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு,
கிழக்கு மாகாணம்.

**தொலைபேசி/දුරකතන/Telephone**
அலுவலகம்/කාර්යාලය/ Office : 026 2220092
தொலைநகரி/ ෆැක්ස්/Fax : 026 2222174
மின்அஞ்சல்/විද්‍යුත් තැපෑල/E-mail : ppsc@ep.gov.lk

கன்னியா வீதி, வரோதயநகர், திருகோணமலை
කන්නියා පාර, වරෝදයනගර්, ත්‍රිකුණාමලය
Kanniya Road, Varothayanagar, Trincomalee